கிருபையுள்ள வார்த்தை ®
KIRUBAIYULLA VAARTHAI
லூக்கா (LUKE) 4:22

Vol - 17 | July ஜுலை | 2016
ஆண்டு சந்தா ரூ. 120/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/-



# திருமணம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாய் இருப்பதாக

எபி 13:4

கௌரவ ஆசிரியர் BETTY CHOATE    ஆசிரியர் பிலேமோன் ராஜா

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


திருமண வாழ்வில் ... 3

திருமண வாழ்வு 7

சிறுவர் பகுதி 9

நாம் முற்றிலும் வெற்றி ... 12



*In memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **PHILEMON RAJAH**

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லிராஜா,** M.S. (I.T.& M.)., M.Th.,

**Dr. V.S. இம்மானுவேல்,** M.Sc., D.D.,

**C. கியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,

**R. ஆண்டனி ராஜா,** D.Th.,

சட்ட ஆலோசகர் : **M. முரளி** B.A.,B.L.


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

வாசகர்கள் கவனத்திற்கு...

**புதுயுகம் T.V. யில்**

செவ்வாய் காலை - 6.15 மணிக்கு

**தமிழன் T.V. யில்**

ஞாயிறு காலை 6-45 மணி

**நம்பிக்கை T.V. யில்**


வெள்ளி காலை 6-15 மணி


கிருபையுள்ள வார்த்தை
நிகழ்ச்சியினை காணத்தவறாதீர்.



செய்தியாளர்கள்:

போதகர். **பிலேமோன்ராஜா,** M.A., M.Th.,
(Director - J.C. School of Evangelism)

சகோ. **கிங்ஸ்லி ராஜா,** M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)


## Advanced Bible Correspondence Courses Available in English.

For Details:

**CHOATE BIBLE CORRESPONDENCE COURSE INSTITUTE**


P.O.Box 15, Arasaradi,
Madurai - 625 016. Tamilnadu

## கிருபையுள்ள வார்த்தை

**கனவன் மனைவிக்கான கடவுளின் வார்த்தை**

**World Literature Publication**

Post Box No. 15, Arasaradi, Madurai 625 016. India




Send Postal Expenses only and receive The Voice of Truth Intl. Vol.88

ஆசிரியர் உரை ...

# திருமண வாழ்வில் கணவன் மனைவிக்கு தேவையான ஞானம்

P.C. பிலேமோன் ராஜா



பிரியமானவர்களே ! ஒரு நல்ல வாழ்க்கை துணையை தேர்ந்தெடுப்பதற்கு உதவும் வழிகாட்டியாக நீதிமொழிகள் புத்தகம் இருக்கிறது. திருமண பந்தத்தில் நாம் எவ்வளவு வெற்றியுள்ளவர்களாக இருக்கின்றோம் என்பதை வைத்தே, நம்முடைய வாழ்வின் மகிழ்ச்சி இருக்கின்றது. கணவன் மனைவியின் உறவு சரியாக இல்லையெனில், அவர்கள் தேவனுக்கும் பயனுள்ளவர்களாக இருக்க முடியாது. உதாரணமாக, ஒரு கணவன் தன் மனைவியை நன்றாக நடத்தவில்லையெனில், அவருடைய ஜெபமும் தடைபடும் (1 பேதுரு 3:7) ஒரு நல்ல திருமண வாழ்வைக் குறித்து தெரிந்துக்கொள்ள நாம் நீதி 31ம் அதிகாரத்தை தியானிப்போம்.

## நற்குணமுள்ள மனைவி

ஒரு நற்குணசாலியான மனைவி எப்படி இருக்க வேண்டுமெனில்..

### ❖ நம்பிக்கைக்குரிய மனைவியாக இருக்க வேண்டும்!

"அவள் புருஷனுடைய இருதயம் அவளை நம்பும்; அவன் சம்பத்துக் குறையாது" **நீதி 31:11.** கணவன் தன் மனைவியிடம், தன் வருமானத்தை நம்பிக்கையோடே கொடுக்க வேண்டும். அதை அவள் வீணாகச் செலவழியாமல், இருவருக்குமே பயனுள்ள வகையில் பயன்படுத்துவாள்.

### ❖ நிலைத்திருக்கும் அன்பினால் நிறைந்திருக்க வேண்டும்!

"அவள் உயிரோடிக்கிற நாளெல்லாம் அவனுக்குத் தீமையையல்ல, நன்மையையே செய்கிறாள்" **நீதி 31:12.** தன் வாழ்க்கை முழுவதும் தன் கணவனுக்கு நன்மை செய்யும்படி அற்பனித்தவளாக, தன் திருமணத்தின்போது செய்துகொண்ட ஒப்பந்தத்தை நினைவுகூர்ந்தவளாக வாழ வேண்டும்.

### ❖ திறன் படைத்தவளாக மனைவி இருக்க வேண்டும்!

"ஆட்டுமயிரையும் சணலையும் தேடி, தன் கைகளினால் உற்சாகத்தோடே வேலை செய்கிறாள், ...இருட்டோடே எழுந்து தன் வீட்டாருக்கு ஆகாரங்கொடுத்து, தன் வேலைக்காரிகளுக்குப் படியளக்கிறாள்." **நீதி 31:13-15. நீதி 31:21-22**யும் வாசிக்கவும். ஒரு நல்ல மனைவி தன் கணவனுக்கு தோள் கொடுப்பவளாக இருக்க வேண்டும். அதாவது சமையல், தையல் இன்றைய கால கட்டத்திற்குத் தேவையான சில அடிப்படை வீட்டுத் தொழில் போன்றவற்றை கற்றறிந்தவளாக இருக்க வேண்டும்.

### ❖ வியாபார திறன் உடையவளாக இருக்க வேண்டும்!

"ஒரு வயலை விசாரித்து அதை வாங்குகிறாள்; தன் கைகளின் சம்பாத்தியத்தினால் திராட்சத்தோட்டத்தை நாட்டுகிறாள். மெல்லிய புடவைகளை உண்டுபண்ணி விற்கிறாள். கச்சைகளை வர்த்தகரிடத்தில் ஒப்புவிக்கிறாள்". **நீதி 31:16,24**



இன்றைய வளர்ந்து வரும் உலகில் ஆண்களுக்கு நிகரான பெண்கள் வியாபார திறன் உடையவர்களாக இருக்க வேண்டும். இக்கட்டான நேரங்களை சமாளிக்க அது உதவும். இது எதிர்காலத்திற்கு பாதுகாப்பகவும் குடும்பத்தின் உதிரி தேவைகளை சந்திக்க ஏதுவாகவும் இருக்கும்.

### ❖ இரக்கமுள்ளவளாக கிறிஸ்தவ மனைவி இருக்க வேண்டும்!

"சிறுமையானவர்களுக்குத் தன் கையைத் திறந்து, ஏழைகளுக்குத் தன் கரங்களை நீட்டுகிறாள்" **நீதி 31:20**

ஆம் பிரியமாணவர்களே, கிறிஸ்தவ மனைவி ஏழைகளுக்கு இரங்குகிறவர்களாகவும்,

தேவையுள்ளவர்களுக்கு உதவுபவளாகவும் இருக்க வேண்டும்.

**❖ உறுதியான பண்புடையவளாக மனைவியானவள் இருக்க வேண்டும்!**

"அவள் உடை பலமும், அலங்காரமுமாயிருக்கிறது; வருங்காலத்தைப் பற்றியும் மகிழுகிறாள்" **(நீதி 31:25)** ஒருவரின் குணாதிசயம் தான் அவரை வடிவமைக்கிறது. அப்படிப்பட்ட குணாதிசயம் (Character) ஒரு மனைவிக்கு உறுதியாக இருக்க வேண்டும். அது, **1 பேதுரு 3:3–4**ல் பேதுரு கூறுவதைப் போல இருக்க வேண்டும். பெண் என்றாலே அழகு மட்டும்தான் என்பதற்கு மேலாக, அவள் உறுதியான குணமுடையவளாகவும் இருக்க வேண்டும்.

**❖ மனைவியானவளின் வார்த்தைகளில் ஞானமும் இரக்கமும் இருக்க வேண்டும்!**

தன் வாயை ஞானம் விளங்கத் திறக்கிறாள் தயையுள்ள போதகம் அவள் நாவின் மேல் இருக்கிறது. **( நீதி 31:26 )** அவள் வாயில் இருந்து புறப்படும் வார்த்தைகளைக் குறித்து கவனமுள்ளவளாக இருப்பாள். தடிமனான, மற்றும் மற்றவர்களை புண்படுத்தும் வார்த்தைகளை ஒரு போதும் பேசமாட்டாள். தன் இரக்கமுள்ள, தயையுள்ள வார்த்தைகளினால் அநேகரை கிறிஸ்துவிடம் வரவழைக்க வேண்டும். எபே 4:29 ல் பவுல் கூறுவதைப்போல வார்த்தைகளை அவள் பேசுவாள்.

**❖ தன் வீட்டாரின் தேவைகளை கிறிஸ்தவ மனைவி சரியாக சந்திப்பாள்!**



''அவள் சோம்பலின் அப்பத்தைப் புசியாமல், தன் வீட்டுக்காரியம் எப்படி நடக்கிறது என்று கண்ணோக்கமாயிருக்கிறாள்'' **நீதி 31:27** தன் வீட்டின் தேவைகள் அனைத்தையும் நேர்த்தியாக ஆயத்தம் செய்து வைப்பாள் **(நீதி 31:15).** மேலும் அவர்களின் ஒருவருக்கும் ஒருபோதும் குறைவு ஏற்படாதபடி அவள் கவனமாயிருப்பாள் **(நீதி 31:21)**

**❖ எல்லாவற்றிற்கும் மேலாக, ஒரு நல்ல மனைவி கர்த்தருக்கு பயப்படுவாள்!**



"கர்த்தருக்கு பயப்படுகிற ஸ்திரியே புகழப்படுவாள் **(நீதி 31:30).** ஒரு நல்ல மனைவி, தன்னுடைய எல்லா நற்குணங்களுக்கும் மேலாக மிகவும் அவசியமானதாக இதை கருதுவார். முக்கியமாக, தன்னுடைய சரீர அழகைவிட, கர்த்தருக்கு பயப்படுவதினால் வரும் அழகையே அவள் அதிகம் விரும்புவாள். கர்த்தருக்கு பயப்படுவதினாலேயே, ஒரு மனைவியானவள் தன் குடும்பத்தை உயர்த்துவதற்கான ஞானத்தை பெற்றுக் கொள்கிறார். வீட்டில் தினசரி குடும்ப ஜெபம், தனிநபர் வேத வாசிப்பு, ஜெபம் மற்றும் குடும்பமாக வேத ஆராய்ச்சிக்கும், சபை கூடுதல் அனைத்திற்கும் செல்லுதல் ஆகியவைகளின் மீதே தன் முதன்மையான கவனத்தை செலுத்துவாள்.

இவைகளே, ஒரு நல்ல மனைவிக்கு உண்டாயிருக்க வேண்டிய பண்புகளாகும்.

மேலும் ஒரு மனைவி எப்படி இருக்கக்கூடாது என்று நாம் வேதாகமத்தில் தேடினோமென்றால்...

சண்டைபோடும் குணமுடையவளாக இருக்கக்கூடாது – **நீதி 21:19,19**

பகைக்கப்படத்தக்கவளாக இருக்கக்கூடாது – **நீதி 30:23**

## சிறந்த கணவன்

அநேக நேரங்களில் பெண்கள், 'ஆண்களுக்கு புத்தி சொல்லும்படியான வசனங்களை ஏன் தேவன் கொடுக்கவில்லை?'என்று கேட்பத்துண்டு. பிரியமான சகோதரிகளே! தயவுசெய்து மனதில் வையுங்கள். நீதிமொழிகள் பிரதானமாக ஆண்களுக்கு எழுதப்பட்டுள்ளது. மேலும், பெண்களுக்கு ஆலோசனையாக பாதி (அரை) அதிகாரமும், 30க்கும் மேற்பட்ட அதிகாரங்கள் நற்குணமுள்ள ஆண்களாக இருக்க ஆலோசனையாகவும் எழுதப்பட்டுள்ளது.

ஆகையினால், நீதிமொழிகள் முழுவதையும் ஒருவர் படித்தால், எந்த மனைவியும் நேசிக்கக்கூடிய ஒரு நல்ல கணவனை அது உருவாக்கும்.

**❖ ஒரு சிறந்த கணவன், தன் மனைவியை நன்றாக மதிக்கக்கூடியவனாக இருப்பான்.**

"மனைவியைக் கண்டடைகிறவன் நன்மையானதைக் கண்டடைகிறான்: கர்த்தரால் தயையும் பெற்றுக்கொள்ளுகிறான்" **நீதி 18:22**

"வீடும் ஆஸ்தியும் பிதாக்கள் வைக்கும் சுதந்தரம்; புத்தியுள்ள மனைவியோ கர்த்தர் அருளும் ஈவு" **நீதி 19:14**

ஆம் பிரியமானவரே ! ஒரு நல்ல கணவன், தன் மனைவியை, தேவனிடத்தில் இருந்த வந்த பரிசாக நினைப்பான்,

**❖ ஒரு சிறந்த கணவன், தன் மனைவியின் வேலைகளுக்கு ஏற்ற மதிப்பையும், பலனையும் அவளுக்கு கொடுப்பான்; அடிமையைப் போல நடத்த மாட்டான்!**

"அவள் கைகளின் பலனை அவளுக்குக் கொடுங்கள்; அவளுடைய செய்கைகள் வாசல்களில் அவளைப் புகழக்கடவது" **(நீதி31:31)** மேலும் அவன், தன் மனைவிக்கு இருக்கும் தாலந்துகளை அவள் பெருக்கிக் கொள்ளும்படி அனுமதிப்பான். அவளுடைய பிரயாசத்திற்கான பலனை அவள் அனுபவிக்க அனுமதிப்பான். தன்னுடைய வேலையை செய்யவும், தன்னுடைய விருப்பத்திற்கு மட்டுமே செயல்படவும் செய்யும் அடிமையைப்போல நடத்த மாட்டான்.

**❖ ஒரு நல்ல கணவன், தன் மனைவியை மனந்திறந்து பாராட்டுவான்!**

"அவள் பிள்ளைகள் எழும்பி, அவளைப் பாக்கியவதி என்கிறார்கள்; அவள் புருஷனும் அவளைப்பார்த்து: அநேகம் பெண்கள் குணசாலிகளாயிருந்ததுண்டு; நீயோ அவர்கள் எல்லாருக்கும் மேற்பட்டவள் என்று அவளைப் புகழுகிறான்." **(நீதி. 31:28,29)** அவன், தன் மனைவியை அடிக்கடி பாராட்டுவான்; அவள்



செய்வதையெல்லாம், அது அவளுடைய கடன்/கடமை என நினைக்கமாட்டான்.

**❖ சிறந்த கணவன், தன் மனைவியை இருதயத்தில் இருந்து நம்புவான்.**

"அவள் புருஷனுடைய இருதயம் அவளை நம்பும்; அவன் சம்பத்துக் குறையாது." **(நீதி 31:11)**

அவன், அவள் மீது பொறாமைப்படவும் மாட்டான்; சந்தேகப்படவும் மாட்டான்.

**❖ தன் மனைவியின் அன்பினால் மட்டுமே திருப்தியடைபவனே ஒரு சிறந்த கணவன் !**

"உன் கிணற்றிலுள்ள தண்ணீரையும், உன் துரவில் ஊறுகிற ஜலத்தையும் பானம்பண்ணு" **நீதி 5:15**

"உன் ஊற்றுக்கண் ஆசீர்வதிக்கப்படுவதாக; உன் இளவயதின் மனைவியோடே மகிழ்ந்திரு. அவளே நேசிக்கப்படத்தக்க பெண்மானும், அழகான வரையாடும் போலிருப்பாளாக..." **நீதி 5:18–20**

ஒரு நற்குணமுள்ள கணவன், தன் மனைவியைத் தவிர வேறெங்கும் தன் கண்களை அலையவிட மாட்டான். அதினால், தனக்கும் தன் குடும்பத்திற்கும் வரும் தீமைகளை போக்குவான்.

பிரியமானவர்களே ! ஒரு நல்ல திருமண வாழ்வு அமையவில்லையெனில், வாழ்விலே நமக்கும் தேவன் தர விரும்பும் எல்லா இன்பங்களையும் இழந்துவிடுவோம். இதற்கு கணவன் மனைவி இரண்டுபேருமே பொறுப்பு !

"சூரியனுக்குக் கீழே தேவன் உனக்கு நியமித்திருக்கிற மாயையான நாட்களிலெல்லாம், நீ நேசிக்கிற மனைவியோடே நிலையில்லாத இந்த ஜீவவாழ்வை அனுபவி; இந்த ஜீவனுக்குரிய வாழ்விலும், நீ சூரியனுக்குக்கீழே படுகிற பிரயாசத்திலும் பங்கு இதுவே" **(பிரசங்கி 9:9)**

அன்பான வாசகர்களே ! இந்த வேத ஆலோசனைகளின்படி வாழ்ந்து திருமண வாழ்வில் வெற்றி பெறுவோம் !

**– அன்புடன், ஆசிரியர்**



ஒரு **கணவனாக** நான்,
அன்பு கூறுவேன், வழி நடத்துவேன்
மற்றும் குடும்ப தேவைகளை
சந்திப்பேன் !

எபே 5:25-29
1 கொரி 11 :3
1 தீமோ 5 :8

ஒரு **மனைவியாக** நான்,
கணவனுக்கு உதவுவேன், கீழ்படிவேன்
வீட்டை வழி நடத்துவேன்
மற்றும் அன்பு கூறுவேன்

ஆதி 2:18, 21-22
1 தீமோ 5 :14
தீத்து 2:4

"ஒண்டியாயிருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம்..." பிரசங்கி 4:9

## பொதுவான செய்திகள்

# அறுசுவை



### சுவை 3: புளிப்பு சுவை (Sour)

உணவிற்கு மேலும் ருசி சேர்க்கும் ஒரு சுவையிது. பசியுணர்வைத் தூண்டும். உணர்வு நரம்புகளை பலுப்பெறச் செய்கின்றது. இதயத்திற்கும், செரிமானத்திற்கும் மிகவும் நல்லது.

இது அதிகமாயின், தாக உணர்வினை அதிகரிக்கும். பற்களைப் பாதிக்கும். நெஞ்செரித்தல், இரத்தக் கொதிப்பு, அரிப்பு போன்ற நொந்திரவுகளை உண்டுவிக்கும். உடல் தளரச் செய்யும்

எலுமிச்சை, புளிச்ச கீரை, இட்லி, தோசை, அரிசி, தக்காளி, புளி, மாங்காய், தயிர், மோர், நார்த்தங்காய் போன்றவற்றில் அதிகம் உள்ளது.



### சுவை 4: கார்ப்பு சுவை (Pungent)

பசியுணர்வைத் தோற்றுவிப்பதோடு அல்லாமல், செரிமானத்திற்கும் பெரிதும் உதவுகின்றது. உடல் இளைக்கவும், உடலின் உள்ள அதிகப்படியான நீரை வெளியேற்றவும் செய்கின்றது. இரத்தச் சுத்தகரிப்புச் செய்கின்றது. தோல் நோய்களுக்கு நல்லதொரு பலனைத் தருகின்றது.

அதிகப்படியான காரம், உடல் எரிச்சலை உண்டுவிக்கும். உடல் சூட்டை அதிகரித்து, வியர்வையை அதிகம் சுரக்கச் செய்யும், குடல் புண்கள் தோன்ற அதிக வாய்ப்பு அளிக்கும்.

வெங்காயம், மிளகாய், இஞ்சி, பூண்டு, மிளகு, கடுகு போன்றவற்றில் அதிகப்படியான காரச்சுவை அடங்கியுள்ளது.

## சிறுவர்க்கான கேள்விகள்

1. திருமணத்திற்கு வராதவர்கள் சொன்ன காரணங்கள் என்ன ?
2. ஈசாக்கினுடைய மனைவியின் பெயர் என்ன?
3. ரெபேக்காள் எப்படிப்பட்டவளாய் இருந்தாள்?
4. திருமண வீட்டில் இயேசு செய்த அற்புதம் என்ன?
5. இயேசு பங்குபெற்ற திருமணம் எந்த ஊரில் நடந்தது?



பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 5-08-2016



# திருமண வாழ்வு

**1. தேவன் ஆணையும் பெண்ணையும் சிருஷ்டித்தார்.**

ஆதி. 2:7 "தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்"

ஆதி. 2:22 "தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவளை மனுஷனிடத்தில் கொண்டு வந்தார்".

**2. தேவன் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் திருமணத்தை ஏற்படுத்தினார்.**

ஆதி. 2:24 "இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்".

**3. இயேசுவும் திருமணத்தை அங்கீகரிக்கிறார்.**

மத்தேயு 19:4-6 ".... இப்படி இருக்கிறபடியினால், அவர்கள் இருவராயிராமல், ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்; ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன் என்றார்".

**4. ஒரு நல்ல மனைவி கடவுளிடம் இருந்து வரும் பரிசு**

மத்தேயு 18:22 "மனைவியைக் கண்டடைகிறவன் நன்மையானதைக் கண்டடைகிறான்: கர்த்தரால் தயையும் பெற்றுக்கொள்ளுகிறான்".

**5. ஒரு கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் சந்தோஷமாய் அனுபவிக்க வேண்டும்.**

1 கொரிந்தியர். 7:3-4 "மனைவியானவள் தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல, புருஷனே அதற்கு அதிகாரி; அப்படியே புருஷனும் தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல, மனைவியே அதற்கு அதிகாரி"

**6. கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் உண்மையாக இருக்க வேண்டும்.**

எபி. 13:4 "விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாகமஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக; வேசிக்கள்ளரையும் விபசாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார்".

**7. கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் தங்கள் பொறுப்புகளை சரியாக நிறைவேற்ற வேண்டும்.**

கொலோசெயர் 3:18-19 "மனைவிகளே, கர்த்தருக்கேற்கும்படி, உங்கள் புருஷருக்குக் கீழ்படியுங்கள் .

புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள், அவர்கள்மேல் கசந்து கொள்ளாதிருங்கள்".

**8. திருமண வாழ்வு அன்பும், மதிப்பும் நிறைந்தது.**

எபேசியர் 5:33 " எப்படியும், உங்களிலும் அவனவன் தன்னிடத்தில் அன்புகூருவதுபோல, தன் மனைவியினிடத்தில் அன்புகூரக்கடவன்; மனைவியும் புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்கக்கடவள்"

# The Duties of Husbands

I. LOVE YOUR WIVES!

A. HUSBANDS ARE TO LOVE THEIR WIVES...
1. As Christ loved the church - Ep 5:25-27,29
2. As they love their own bodies - Ep 5:28-29
3. Free from bitterness - Col 3:19

B. HUSBANDS ARE TO LOVE THEIR WIVES...
1. With "agape" love (active good will) Ep 5:25; 1Co 13:4-8
2. With "phileo" love (sentimental, affectionate) Ep 5:29; Ep 6:4; 1Th2:7
3. With "eros" love (sexual) Ep 5:31; 1Co 7:2-5

II. RESPECT YOUR WIVES!

A. BY HOW YOU TREAT THEM...
1. With understanding - 1Pe 3:7
2. With honor - 1Pe 3:7; Pr 31:28
3. As to the weaker vessel - 1Pe 3:7

B. BY HOW YOU VIEW THEM...
1. As a fellow heir of the grace of life - 1Pe 3:7
2. As one who affects the efficacy of your prayers! - 1Pe 3:7
God will not heed our prayers if we mistreat our wives! - Mal 2:13-16

III. SUPPORT YOUR WIVES!

A. BY PROVIDING FOR THE FAMILY...
1. The husband (and father) has the duty to provide for his family- 1Ti 5:8




## ஜெபியுங்கள் !

அன்பு வாசகர்களே !
ஜீலை 15ல் நடைபெறும்,
நம்முடைய இதழ் ஆசிரியரின்
இளைய மகள்
**குயினி கமல கிருபா** மற்றும்
சகோதரர் **பிரதீப்** ஆகியோரின்
திருமணத்திற்காக ஜெபியுங்கள் !

# The Duties of Wives

I. WIVES ARE TO SUBMIT TO THEIR HUSBANDS...
1. As the church submits to Christ, in everything - Ep 5:22-24
a. Presuming that it is in keeping with the will of God –Ac 5:29

II. LOVE YOUR HUSBANDS!

A. WITH AFFECTION -Tit 2:4; Tit 2:3-4

B. WITH INTIMACY...
1. To prevent unfaithfulness - 1Co 7:2;1Co 7:3-4
2. Abstaining only with mutual consent, for the purpose of prayer - 1Co 7:5

III. MANAGE THE HOME!

A. AS HOMEMAKERS...
1. "to be discrete, chaste, homemakers, good" - Tit 2:5
2. "manage the house" - 1Ti 5:14
3. This also can be learned from older sisters in Christ –Tit 2:3-5

B. AS MOTHERS...
1. Note the instructions for young widows: "marry, bear children" - 1Ti 5:14
2. The primary design of marriage is to start a family; if a young wife is unable to bear a child, adoption if certainly a viable and wonderful option!

**சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்**

1. P.A. சுசித்ரா – சேலம்
2. M. வின்செண்ட் – கோவை
3. E. சரோன் குளோரியா– மங்கலம்
4. A. கெனித் சாம்– மதுரை
5. J. ரிச்சர்ட் ஞானசேகர் – திருச்சி

பாடம் 1

# சாக்குப்போக்கு சொல்லாதீர் !

சிறுவர் பகுதி

ஹாய் குட்டீஸ் ! உங்களுக்காக நாங்கள் எப்பொழுதும் ஜெபிக்கிறோம். நம் மனதில் எப்போதும் நினைவில் இருக்க வேண்டிய ஒரு முக்கியமான விஷயத்தை பற்றி தெரிந்துக்கொள்வோமா?

ஒரு ராஜா தன் மகனுக்கு கல்யாணம் நடத்தி, ஒரு பெரிய விருந்தினை ஏற்பாடு செய்திருந்தார். ஆனால் அந்த கல்யாணத்திற்கு அழைக்கப்பட்ட விருந்தினர் ஒருவருமே வரவில்லை. அதினால் ராஜா என்ன செய்தார் தெரியுமா?தன் வேலைக்காரர்களை அழைத்து, மறுபடியும் போய் விருந்தினர் எல்லோரையும் அழைத்துவரச் சொன்னார். அவர்களில் ஒருவன் எனக்கு வயலில் வேலை இருக்கிறது. என்னால் வரமுடியாது என்றான். இன்னொருவன் வியாபாரத்தை கவனிக்க வேண்டும் என்னால் வர முடியாது என்றான். ஒருவன் மாடுகளை கவனிக்க செல்கிறேன் என சென்றான். மற்றொருவன் நான் புதிதாக திருமணமானவன் வரக்கூடாது என்று, ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு காரணத்தை (சாக்குப்போக்கை) சொல்லி வர மறுத்துவிட்டார்கள். இன்னும் சிலர் என்ன செய்தார்கள் தெரியுமா? ராஜாவின் வேலைக்காரரை சிலர் அவமானப்படுத்தினார்கள், சிலரை கொன்றும் போட்டார்கள்.



இதையெல்லாம் கேள்விப்பட்ட ராஜா பயங்கரமாக கோபங்கொண்டு, தன் படை வீரர்களை அனுப்பி, அழைப்பினை அலட்சியம் செய்த அனைவரையும் அழித்துப் போட்டார். மற்றும் தன் வேலையாட்களை அனுப்பி கண்ணில்படுகிற மக்கள் எல்லாரையும் விருந்தில் கலந்துக்கொள்ள வைத்தார். கல்யாண் வீடு முழுவதும் விருந்தாளிகளால் நிறைந்தது.

குட்டீஸ் ! இதைப் போல் தேவன், இன்றைய நாட்களில் நம்மை பரலோகத்திற்கு வரும்படி அழைப்பு விடுத்திருக்கிறார். ஞாயிறு தோறும் தொழுகைக்கு செல்வதற்கும், சண்டே பள்ளி செல்வதற்கம், சபை எப்பொழுதெல்லாம் கூடி வருகிறதோ அப்பொழுதெல்லாம் கூடிவரும்படியும், தினமும் தனியாகவும் குடும்பமாகவும் ஜெபிக்கும்படியாக, தேவனை துதிக்கும்படியாக, அவருடைய வேதாகமத்தை வாசிக்கும்படியாக, நமக்கு அழைப்பு விடுத்திருக்கிறார். நாம் இதை அலட்சியம் செய்தால், பரலோகத்தை தவறவிடுவதுமல்லாமல், தேவ தண்டனைக்கும் ஆளாவோம்.

**மனன வசனம் : யோவான் 12:48**

“என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிற தொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்”.

– குயினி பிலேமோன்

**சென்ற மாதம் பெயர் விடுபட்டவகள்**

1. G. ஏஞ்சலம்மாள் – உத்தங்குடி
2. J. விஜய் – உத்தங்குடி
3. பங்கஜம் ஜேம்ஸ் – உத்தங்குடி
4. R. நாகலிங்கம் – திருச்சி
5. P. இந்திரா பாண்டி – திருமங்கலம்
6. P. சூரிய பிரியா – திருமங்கலம்
7. P. வசந்த் – குன்னூர்
8. M. ஆலிவர் – குஜராத்
9. A. ரோஸ்மேரி – எருகஞ்சேரி


பாடம் **2**

# ஆபிரகாம் வீட்டு திருமணம்

சிறுவர் பகுதி

ஹாய் கடவுளின் செல்லப்பிள்ளைகளா ! உங்கள் யாவரையும் ஆண்டவர் இயேசுவின் பெயராலே வாழ்த்துகிறேன்.

ஆபிரகாம் தன் மகன் ஈசாக்கிற்கு திருமணம் செய்து வைக்க ஆசைப்பட்டார். அவர் தன் பிரதான வேலைக்காரனாகிய எலியேசரை அழைத்து தன் மகனுக்கு பெண் பார்த்து வரும்படி அனுப்பினார். அந்த எலியேசர் ஆபிரகாம் சொன்னபடி ஈசாக்கிற்கு பெண் பார்த்துக்கொண்டு வந்தார். ஈசாக்குடைய மனைவியாகப் போகும் பெண் யார் என்று உனக்கு தெரியுமா? அவளுடைய பெயர் ரெபெக்காள். அவள் ஈசாக்கின் மனைவியாக போகிறாள், எப்படி?



தன்னுடைய மகன் ஈசாக்குக்கு ஒரு நல்ல மனைவியை தேடிக் கொடுக்க வேண்டுமென ஆபிரகாம் ஆசைப்பட்டார். கானாகிய பெண்களில் ஒருத்தியை ஈசாக்குக்கு கல்யாணம் செய்து வைக்க அவர் விரும்பவில்லை. ஏனென்றால் கானானியர்கள் விக்கிரகங்களை (சிலைகளை) வணங்கிவந்தார்கள். எனவே ஆபிரகாம் தன் வேலைகாரனை அழைத்து ஆரானில் என் சொந்தகாரர் வாழ்கிற இடத்துக்குபோய் என் மகன் ஈசாக்கிற்கு ஒரு பெண்ணை பார்த்து கூட்டிக்கொண்டுவா என்று சொன்னார். ஏனெனில் அந்த நாட்டில் உள்ள ஜனங்கள் ஆபிரகாமைப் போல ஜீவனுள்ள தேவனை வணங்கி வந்தார்கள். அந்த வேலைக்காரனும் உடனடியாக பத்து ஒட்டகங்களோடு தூரமான அந்த இடத்திற்கு கிளம்பினான். அந்த இடத்திற்கு பக்கத்தில் வந்தபோது ஒரு கிணற்றின் அருகே சற்று நின்றான். அங்கிருந்த பெண்கள் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுக்க வருவார்கள். எனவே கடவுளிடம் அவன் 'எனக்கும் என் ஒட்டகங்களுக்கம் எந்த பெண் தண்ணீர் கொண்டுவந்து கொடுக்கிறாளோ அந்த பெண்ணே நீர் ஈசாக்குக்கு மனைவியாக தெரிந்தெடுக்கிற பெண்ணாக, இருக்கட்டும்' என்று மனதுக்குள் ஜெபித்தான். அவன் குடிக்க தண்ணீர் கேட்க, அவள் அவனுக்கும் அவன் ஒட்டகங்களுக்கு தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தாள். அவள் கடவுளை நேசிக்கிறவளாகவும், நன்மை செய்கிறவளாகவும் தாழ்மையுள்ளவளாகவும் இருந்தாள். இந்த ரெபெக்காளை ஆபிரகாம் தன் மகனான ஈசாக்குக்கு மனைவியாக தேர்ந்தெடுத்தார். ஏனென்றால் தேவனுடைய பிள்ளைகள், தேவனுடைய பிள்ளையை திருமணம் செய்யனும். அப்பதான் தேவன் அவர்களை ஆசீர்வதிப்பார். செய்வீர்களா? கர்த்தர் உங்கள் எதிர்காலத்தை ஆசீர்வதிப்பார்.

**மனன வசனம் : 2 கொரிந்தியர் 6:14**

அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக...

**– எஸ். அன்பு ஏசுதாஸ்**

பாடம் **3**

# கானாவூர் கல்யாணம்

சிறுவர் பகுதி

அன்புள்ள குட்டி செல்லங்களுக்கு, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பெயரால் இந்த அக்காவின் அன்பின் வாழ்த்துக்கள். அக்கா உங்களுக்கு ஆண்டவர் இயேசு செய்த ஒரு அற்புதத்தை பற்றி சொல்லப் போகிறேன்.

ஆண்டவர் இயேசு, இந்த பூமியில் வாழ்ந்த நாட்களில் செய்த முதல் அற்புதம் எது தெரியுமா? சாதாரண தண்ணீரை ருசியான திரட்சை ரசமாக்கினார். அதை எங்கு செய்தார் தெரியுமா? ஒரு கல்யாண வீட்டில். ஏன் திருமண வீட்டில் செய்தார்? ஏனெனில் திருமணம் என்பது தேவனாலே ஆசீர்வதிக்கப்பட்ட ஒன்று.

கானாவூர் என்ற ஊரில் நடந்த ஒரு கல்யாணத்திற்கு இயேசுவும், அவருடைய அம்மா மரியாளும்

சென்றிருந்தனர். இயேசு கிறிஸ்து ஒரு இடத்திற்கு சென்றால், அங்கே சந்தோஷமும், நன்மையும் உண்டாகும்! அப்படித்தானே?

அப்படித் தான் இயேசு கிறிஸ்து சென்ற கல்யாண வீடும் மிகுந்த சந்தோஷமும், மகிழ்ச்சியும் நிறைந்து இருந்தது. கல்யாணத்திற்காக உணவுகளும் விதவிதமாக செய்யப்பட்டிருந்தது. வந்திருந்த அனைவரும் சந்தோஷமாக சாப்பிட்டனர். கடைசியாக என்ன நடந்தது தெரியுமா? விருந்திற்காக செய்யப்பட்டிருந்த திராட்சை ரசம் மட்டும் தீர்ந்து விட்டது.



இயேசுவின் அம்மா இந்த தகவலை அவரிடம் சொன்னார். ஆண்டவர் இயேசு வெறும் தண்ணீரை கற்சாடிகளில் நிரப்ப செய்தார். பிறகு அந்த தண்ணீரை மிகவும் ருசியான திராட்சை ரசமாக மாற்றினார். அதனை சாப்பிட்ட அனைவரும், முன்பு இருந்த திராட்சை ரசத்தைவிட ருசியாக இருந்ததிற்காக பாராட்டினர். அநேகர் ஆண்டவர் இயேசுவின் மேல் விசுவாசம் வைத்தனர்.

குட்டீஸ்! இதிலிருந்து என்ன தெரிகிறது? ஆண்டவர் இயேசுவை நாம் அழைத்தோம் என்றால், ஆண்டவர் நம்முடைய குறைவை எல்லாம் நிறைவாக்குவார். ஆகவே, நாம் என்ன செய்தாலும் , எங்கு சென்றாலும் ஜெபம் செய்து, துணைக்கு ஆண்டவரை அழைத்துச் செல்ல வேண்டும். அப்பொழுது வாழ்வு வெற்றி உள்ளதாகும்! செய்வீங்க தானே?

**மனன வசனம் : சங் 37:5** "உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்."

**– பிரியா ஆண்டனி**

# Gospel Through Media by World Evangelism Team

**Philemon Rajah & Kingsly in Tamil on Tamilan TV :** Every Sunday 6.45 - 7.00 a.m (TAMILNADU Contact Mobile : ***92 4421 4421 & 92 4431 4431***) ***Puthuyugam TV :*** *Every Tuesday 6 :15 a.m.* ***Nambigai TV*** *: Every Friday 6:15 am*

**Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV :** Every Monday 7.00 - 7.15 a.m., Every Thursday 9.30 - 10.00 a.m. and Every Saturday 7.15 - 7.30 a.m. - Contact : 98427 30382

**Arjunan in Tamil on Tamilan TV & Radio :** TV : Every Monday 6.00 - 6.15 a.m. and Every Saturday 6.15 - 6.30 p.m. Radio : Every Saturday 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile : 94435 58041)

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV :** Every Sunday 6.00 p.m. and Saturday 8.00 a.m. **Rakshana T.V :** Every Wednesday 6.30 p.m. and Thursday 2.30 a.m. (ANDRAPRADESH Contact Phone : 088423 63722)

**P.R. Swamy & Douglas in Tamil on Radio :** Every Sunday to Wednesday at 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNATAKA Contact Mobile : 098440 70763)

**P.K. Varghese in Malayalam on JaiHind TV:** Every Saturday 6.00 - 6.30 a.m. on Jai Hind Channel.

(KERALA Contact Mobile : 94470 35465)

**Sunny, Francis & Vinay David in Hindi on Shubh Sandesh TV :** Every Tuesday 7.00 - 7.30 on Shubh Sandesh Hindi Channel. (NEW DELHI Contact Mobile : 098108 96789)

# தொடர் 9 நாம் முற்றிலும் வெற்றி கொள்ளுகிறவர்கள்!

## We are more than Conquerers !

### மனுஷகுமாரனுக்கு ஒப்பானவர்

மனுஷ குமாரன் ஏழு குத்துவிளக்குகளின் மத்தியில் நிலையங்கி தரித்தவராக உலாவுவதைப் பார்த்த யோவான், தான் கண்டவைகளைக் குறித்து வெளிப்படுத்தின விசேஷம் 1:12,13ல் எழுதியிருப்பதை ஆராய்ந்தோம். தொடர்ந்து அவருடைய சிரசிலிருந்து பாதம் வரையிலான தோற்றத்தை யோவான் விவரிக்கிறார் (வச. 14-16).

### அ. யோவான் மனுஷக் குமாரனின் சிரசைக் கண்டார் (வச. 14)

"அவருடைய சிரசும் மயிரும் வெண் பஞ்சைப் போலவும் உறைந்த மழையைப் போலவும் வெண்மையாயிருந்தது;"

1. கர்த்தருடைய சிரசும் மயிரும் வெண்பஞ்சைப் போலவும் உறைந்த மழையைப் போலவும் (தூய வெள்ளை கொண்ட பனிக் கட்டியைப் போல) இருந்தது என்று யோவான் குறிப்பிடுவதிலிருந்து மனுஷ குமாரன் உலகத் தோற்றத்துக்கு முன் இருந்த நித்தியமானவர் என்பதை உறுதிப்படுத்துகிறது. இதைத்தான் வசனம் 11ல், "நான் அல்பாவும் ஒமேகாவும் முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன்" என்று தமது தோற்றமோ முடிவோ இல்லாத நித்தியத் தன்மையைக் குறிப்பிட்டார். அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார் என்று எபிரேய ஆசிரியர் எழுதினார் **(எபி. 13:8)** 2. மேலும் அவருடைய அனந்த ஞானத்தையும் அது சுட்டிக் காட்டுகிறது. **(நீதி 16:31). 1 கொரிந்தியர் 1:31ல்** அவரே ஞானமாயிருக்கிறார் என்று சொல்லப்படுகிறது. (3) இந்த வெண்மை தெய்வீகப் பரிசுத்தத்தைக் குறிப்பிடுகிறது. (ஏசா. 1:18). இது தானியேல் 7:9ல் தானியேல் தரிசனத்தில் கண்ட மனுஷகுமாரன் இவர் தான் என்பதை தெளிவுபடுத்துகிறது. இப்படியாக அவருடைய சிரசு பற்றியக் காட்சி அவருடைய **நித்தியம், ஞானம், பரிசுத்தத்தைக்** குறிப்பிடுகிறது.

அவர் பரிசுத்தராயிருப்பது போல நாமும் பரிசுத்தராயிருந்து **(1 பேதுரு 1:16),** அவருக்குப் பயப்படும் பயத்தினால் ஞானத்தைப் பெற்று **(நீதி 1:7: யாக் 1:5),** அவரோடே கூட நித்திய நித்தியமாய் பரலோகத்தில் வாசம் பண்ணும் ஆசீர்வாதத்தை பெற ஏதுவான வெற்றி வாழ்க்கை வாழுவோமாக **(வெளி. 2:10)**

### ஆ. யோவான் மனுஷகுமாரனின் கண்களைக் கண்டார் (வச.14).

"அவருடைய கண்கள் அக்கினி ஜுவாலை போலிருந்தது". தானியேல் தனது தரிசனத்தில் ஒரு புருஷன் தேவனிடத்திலிருந்து தன்னிடத்திற்கு வந்ததைக் கண்டார். அவருடைய கண்கள் எரிகிற தீபங்களைப் போலிருந்தது இது அவர் சகலத்தையும் அறிகிற ஞானத்தையும் எங்கும் வியாபித்திருக்கிறத் தன்மையையும் காட்டுகிறது. "அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமுமாயிருக்கிறது; அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்" **(எபி. 4:14)** மனுஷருக்குள் இருப்பதையும் அவர் அறிந்திருக்கிறார் (யோவான் 2:25). அவர் எங்குமிருக்கிறார் **(சங். 139:1-13).** சகோதரனே சகோதரியே நமது சூழ்நிலையை அவர் அறியாமலிருப்பாரா?

### இ. மனுஷ குமாரனின் பாதங்களை யோவான் கண்டார் (வெளி. 1:15அ)

"அவருடையப் பாதங்கள் உலைக் களத்தில் காய்ந்த பிரகாசமான வெண்கலம் போலிருந்தது" மீண்டும் தானியேல் கண்ட அந்தப் புருஷனுடைய தோற்றத்திற்குத் திரும்புகிறோம். **(தானி. 10:6).** "அவருடைய கால்கள் துலக்கப்பட்ட வெண்கல நிறத்தைப் போலிருந்தது" என்று கண்டார். வெண்கலம் எனும் சொல் திருமறையில் கடினத் தன்மைக்கும் உறுதிக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது **(சங். 107:15).** அதன் பிரகாசம் கர்த்தருடைய பாதங்களின் தீவிரமான செயலாற்றலைக் குறிக்கிறது. **எசேக்கியேல் 1:7ல்** தேவதூதர்களின் வேகத்தைக் காட்டுகிறது. **மல்கியா 4:3** சீயோன் குமாரத்தியின் வெண்கலப் பாதம் சத்துருக்களை மிதித்துப் போடும் வலிமை இருப்பதை உணர்த்துகிறது. இப்படியாக மனுஷகுமாரன் தீவிரமாய் தமது சத்துருக்களை நிர்மூலமாக்கித் தமது ஜனமாகிய கிறிஸ்தவர்களைக் காப்பார் எனக் காட்டப்படுகிறது **(லூக்கா 18:8).**

**ஈ. மனுஷ குமாரனின் சத்தத்தை யோவான் கேட்டார். (வெளி. 1:15ஆ)**

“அவருடைய சத்தம் பெருவெள்ளத்து இரைச்சல் போலிருந்து”

இது எசேக்கியேல் 43:2 ஐ நினைவுபடுத்துகிறது. அவருடைய சத்தம் பெரு வெள்ளம்” தண்ணீரின் மிகுந்த சத்தத்தை குறிப்பிடுகிறது. நோவா காலத்து வெள்ளமும் மத்தேயு 7:27ல் ஆண்டவர் பேசும் பெரு மழை, பெரு வெள்ளமும் அழிவை கொடுப்பதைக் குறிக்கிறது. எலியாவின் காதுகளில் கர்த்தர் மெல்லிய சத்தத்தில் பேசினார் (1 ராஜா 19:11,12) அநேக கர்த்தருடைய சத்தம் மிகுந்த இரைச்சலுடையதாக, ஜனங்கள் நடுங்கி பயப்படக்கூடியதாகவும் இருந்தது (யாத் 20:19). இரண்டிலும் அவர் தமது சித்தத்தை வெளிப்படுத்துவது நிகழ்ந்துள்ளது. தமது சாட்சியத்தை விளங்கப் பண்ண அமைதியாகப் பேசும் இயற்கையும் ஆராவரி சத்தமிடும் சமுத்திரமும் தேவனுடைய சத்தத்தை வெளிப்படுத்துகின்றன. **(சங். 19:1–4: யோபு 38:8–11)** இன்று அவருடைய சத்தம் திருமறையில் கேட்கிறது. எனவே இருதயத்தை கடினப்படுத்தா திருப்போமாக **(எபி. 3:19)**

**உ. மனுஷகுமாரனின் பெலத்தை யோவான் கண்டார் (வெளி. 1:16அ)**

“தமது வலது கரத்திலே ஏழு நட்சத்திரங்களை ஏந்திக் கொண்டிருந்தார்.”

வலது கரம் வல்லமையைக் குறிக்கிறது **(யாத். 15:16).** சங்கீதக்காரனும் சங்கீதம் 43:8ல், “... உமது வலது கரம் என்னைத் தாங்குகிறது” என்று சொன்னார். யோபு 38:31ல் நட்சத்திரங்களை இணைக்கும் பெலன் கர்த்தருக்கு உண்டு என யோபு குறிப்பிட்டார். நட்சத்திரங்களை ஏந்திக் கொண்டிருந்த காட்சியை நேரடிப் பொருளில் எடுத்துக் கொள்வோமாகில் இது கற்பனைக்கு எட்டாதது. ஏனெனில் நட்சத்திரங்கள் ஒரு வகையான எரிவாயுவைக் கொண்டவை என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். சில நட்சத்திரங்கள் சூரியனைப் போன்று அளவையும் பாரமுமுடையவை சில நட்சத்திரங்கள் சூரியனைக் காட்டிலும் பெரியவை என்கின்றனர் அப்படியிருப்பின் ஏழு நட்சத்ரங்களைத் தமது ஒரே (வலது) கையில் ஏந்துவது எப்படி? அது சாத்தியமா? (1:16 அ 2:1) ஆனால் ஆவிக்குரிய பொருளில் அவர் நட்சத்திரங்களை இணைக்கக்கூடுமானால் அவைகளை ஏந்திக் கொண்டிருப்பதும் சாத்தியமே. அவரால் கூடாத காரியம் எதுவுமில்லை **( லூக்கா 1:37).** இதை சுயமாக அர்த்தம் கொண்டு வாதிட வேண்டுவதில்லை. அந்த நட்சத்திரங்கள் ஏழு சபைகளின் தூதர்களாம் (வச.20)

**ஊ. “அவருடைய வாயிலிருந்து புறப்படும் வார்த்தையை இருபுறமும் கருக்குள்ள பட்டயமாக” எபிரேய எழுத்தாளர் குறிப்பிட்டார் (எபி. 4:12)**

அதினால் அவர் தமது ஜனங்களின் சத்துருக்களை சங்கரிக்கிறார். **(ஏசாயா 11:4).** இப்பொழுது கிறிஸ்தவர்களை உபத்திரவப்படுத்தும் ரோம சக்கரவர்த்தியையும் அவனுடைய கூட்டாளிகளையும் சங்கரிப்பார் என்பதை தேவனுடைய மக்கள் நினைவில் வைக்கும்படி குறிப்பிடுகிறார் **(ஏசாயா19:2: 2 தெச 2:8: எபே. 6:17: வெளி. 19:15,21)** இந்த பட்டயக் கருக்குக்கு கள்ளத் தீர்க்கதரிசிகளும் தப்ப முடியாது **(யாக். 3:1: வெளி. 2:16)**

**எ. “அவருடைய முகம் வல்லமையாய்ப் பிரகாசிக்கிற சூரியனைப் போலிருந்தது” என யோவான் கண்டார் (வச.16இ).**

இக்காட்சி இயேசு மறுரூப மலையில் சூரியனைப் போல பிரகாசிப்பதாக மத்தேயு 17:2ல் சொல்லப்பட்டுள்ளதை நினைவூட்டுகிறது. தேவனால் அவருக்குக் கனமும் மகிமையும் அளிக்கப்பட்ட காட்சி அது என்று பேதுரு குறிப்பிட்டார் (2 பேதுரு 1:17). அவரே நீதியின் சூரியன் என்று மல்கியா சொன்னார் **(மல்கியா 4:2).**

சுருங்கச் சொல்லின், அன்று ஆசியாவிலிருந்த ஏழு சபைகளின் மத்தியில் உலாவி அவர்களுக்குப்பாடுகளும் உபத்திரவங்களும் வரும்போது, அவர்களைத் தாங்குகிறவராய், அவர்களுக்கு எதிரானவற்றை தமது பட்டயக்கருக்காக காணும் வசனத்தால் சங்கரித்து வெற்றி கொள்ளச் செய்வதைக் குறிப்பிட்டார். அதற்கான தகுதி அவர் பிரதான ஆசாரியனாக, வல்லமையுள்ளவராய், நித்தியமானவராய், வலிமை பெற்றவராக தாங்கி நடத்துபவராக வெளிப்படுத்தினால் நாமும் வெற்றி கொள்வோம்! அவர் இருக்க பயமேன்?

போதகர் **E.A. ஆறுமுகம்**
திண்டுக்கல்

## ஜூலை மாத கேள்விகள்

1. நீதி 31:20ன்படி, நல்ல ஸ்திரி(மனைவி) எப்படிப்பட்டவளாயிருக்கிறாள்?
2. குணசாலியான ஸ்திரியுனுடைய உடை எப்படிப்பட்டது?
3. யாருடன் குடியிருப்பதைவிட, வனாந்திரத்தில் குடியிருப்பது நலம்?
4. நல்ல மனைவி, தன் வாயை எப்படி திறக்கிறாள்?
5. மனைவியை கண்டடைகிறவன் எதை கண்டடைகிறான்?
6. அநேகம் பெண்கள் குணசாலிகளாயிருந்ததுண்டு; நீயோ .........................................
7. தன் மனைவியுடன் மட்டுமே மகிழ்ந்திருப்பதைப் பற்றி, கணவனுக்கு நீதிமொழிகள் தரும் ஆலோசனை என்ன?
8. யோவானின் தரிசனத்தில் மனுஷகுமாரனின் சிரசும், மயிரும் எப்படி இருந்தது?
9. மனுஷகுமாரனின் சத்தம் எப்படி இருந்தது?
10. நீதி 31:31ன் படி, ஒரு சிறந்த கணவன் செய்ய வேண்டியது என்ன?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 5-08-2016**

அனுப்ப வேண்டிய முவகரி : **சகோதரி. பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016
செல்: 92 4421 4421, 92 4431 4431

### ஜூன் மாத பதில்கள்

1. 1 பேதுரு 3:10-11 2. எஸ்றா 3 : 9 3. மத்தேயு 5 :7
4. ரோமர் 12:10 5. ரோமர் 12 :16 6. சங்கீதம் 37 :12
7. I யோவான் 3:4 8. ரோமர் 14 :23 9. யாக்கோபு 4 :17
10. யோவான் 10 :10

### ஜூன் மாத கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

1. A. டேவிட் ஜெயச்சந்திரன் – மதுரை
2. Mrs. ரூபவதி நோபல் – நெல்லை
3. அ. ஆனி விக்டோரியா – சென்னை
4. சூசை மரியன் – சென்னை
5. Mrs. பியூலா ஏசுராஜன் – புதுச்சேரி
6. Mrs. செல்வி ஜான்ரோஸ் – நாகர்கோவில்
7. Sis. லில்லி புஷ்பம் – தூத்துக்குடி
8. Mrs. மேரி ராஜ் – மதுரை
9. Mrs. லில்லி ஆல்பர்ட் – நெல்லை
10. பிரேமலதா சுந்தர்பாபு– செங்கல்பட்டு
11. Mrs. சாந்தா ஜெயக்குமார் – சென்னை
12. சாந்தி ஜோயல் – திருச்சி
13. G. புஷ்பா ஜேம்ஸ் – விருதுநகர்
14. Mrs. A. சந்திரா – மதுரை
15. Mrs. ஃப்ளோரா சுந்தர் – மதுரை
16. J. செல்வி ஜெயராஜ் – நாமக்கல்
17. K. மோகன் – கொமாரபாளையம்
18. C. பூபதி லாரன்ஸ் – திருச்சி
19. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் – சேலம்
20. தெபோராள் ஸ்டீபன் – சேலம்
21. Mrs. விஜய சந்திரா – கோவை
22. J. ஜெயசீலன் – திருப்புத்தூர்
23. M.S. ஜேம்ஸ் – திண்டுக்கல்
24. தேவி ராஜாசிங் – திருப்பூர்
25. S. சுதந்திரமணி – திருப்பத்தூர்
26. Mrs. ஸ்டெல்லா வால்டர் – கோவை
27. R. மரிய ஜோசப் – முடிச்சூர்
28. மெர்ஸி சுதா – கோவை
29. S. கேத்ரின் அருள்நேசம் – மதுரை
30. ச. பன்னீர் செல்வம் – சேலம்
31. R. சரோஜா –தென்கலம்
32. Mrs. சந்திரா பீட்டர் – திருச்சி
33. Dr. D.S. ஜெபநேசன் – திண்டுக்கல்
34. Mrs. சுகந்தி ஜோன்ஸ் – திருச்சி
35. Mrs. ஜாய்ஸ் ஜோசுவா – வெள்ளாரம்
36. Mrs. D.I. அன்பு சுதந்திரம் – ஏர்வாடி
37. J. ஜோசப் – கோவில்பட்டி
38. Mrs. ஜெயமணி ராஜம்மாள் – புதுக்கோட்டை
39. Mrs. R. ஞானசிரோன்மணி– சமயநல்லூர்
40. Mrs. ராஜம்மாள் – திருப்பூர்
41. திருமதி. காந்தா மனோகரன் – திருச்சி
42. G. பீற்றர் பால்ராஜ் – ஆறுமுகநேரி
43. A. செல்வி– விருதுநுகர்
44. Mrs. ரூபி ஜெபராஜ் – மதுரை
45. Mrs. J. மேரி சாராள் – சமயநல்லூர்
46. Mrs. தெல்மா ஸ்டான்லி – மதுரை
47. J. ரேச்சல் தமிழரசி – பசுமலை
48. A. ரோஸ்மேரி – சென்னை
49. Mrs. ஜெபசீலி ஜெயக்கொடி – திருச்சி
50. R. நாகலிங்கம் – திருச்சி
51. R. பவுல் ஜெபராஜ் – சென்னை
52. S. அசோக்குமார் பிரின்ஸ்– தூத்துக்குடி
53. J. ஜான்ஸ் – ஆனைமலை
54. ஷீலா ரிச்சர்ட்தாஸ் – சென்னை
55. Mrs. ஹெலன் திலக் – மதுரை
56. D. மோசஸ் – தஞ்சாவூர்
57. S. தேவராஜன் – கோவை

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

# பார்வையற்றோருக்கான வேதாகம முகாம்




இம்மாதம் சிவகங்கையில் நடைபெற்ற பார்வையற்றோருக்கான வேதாகம முகமாமில் பங்குபெற்றவர்கள்






முகாமில் கலந்துகொண்ட பார்வையற்றோருக்கு ஆடியோ பைபிள், பிரெயில் பைபிள் பாடங்கள், பிரெயில் மாதப்பத்திரிக்கைகள் மற்றும் வேதாகம ஆலோசனையும் வழங்கப்பட்டது




பார்வையற்றோருக்கான வேதாகம முகமாமில் திருமுழுக்கு பெற்றவர்கள்



அரசரடி கிறிஸ்துவின் சபையில் திருமுழுக்கு பெற்ற வாலிபர்



பைபிள் பாடங்களை முடித்து வேதாகமத்தை பரிசாக பெறும் வாலிப பெண்கள்





ஆந்திர மாநிலத்தில் நடைபெறும் J.C. School of Evangelism



மாதந்தோறும் பார்வையற்றோருக்கு அரிசி வழங்கப்படுகிறது

Owned, Published & Edited by P.C. PHILEMON RAJAH
Printed at Thee Classic Printers Madurai-1 Phone 2323819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2015-2017
Posted at Arasaradi HPO on 10th, 11th July 2016

## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்







அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/-மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

---



## தபால் வழி பைபிள் பாடங்கள்






அடிப்படை (Basic) மற்றும் முதுநிலை (Advanced) பைபிள் பாடங்களை தபால் வழியில் படித்து, அழகிய சான்றிதழும் (Certificate) முழு பைபிளையும் பரிசாக பெறுங்கள்!

## கைபிரதிகள்



உங்கள் சுவிஷேச ஊழியத்திற்கு கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில் பாதி விலையில் கிடைக்கும். விபரங்களுக்கு

**92 4421 4421, 92 4431 4431**

If undelivered please return to :

EDITOR
KIRUBAIYULLA VAARTHAI

45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

To

Visit www.graciousword.org to read kv magazine online
follow us in facebook : NT Gospel Restorers